இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 15-07-2023

# நீட்டிப்பு... நீக்கம்... நியாயம்

**பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகள் மீது அமலாக்கத்துறை பாய்கிறது என்றால், அமலாக்கத்துறை மீதே பாய்ந்துவிட்டது உச்சநீதிமன்றம். அமலாக்கத்துறை இயக்குநர் சஞ்சய் மிஸ்ராவுக்கு வழங்கப்பட்ட பதவி நீட்டிப்பை சட்டவிரோதம் என்று சொல்லி விட்டது உச்சநீதிமன்றம். இதனை விட அவமானம் பா.ஜ.க. அரசுக்கு இருக்க முடியுமா?**

**அமலாக்கத்துறையை தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராகப் பா.ஜ.க. பயன்படுத்தி வருகிறது என்பதற்கு ஆதாரங்கள் தேவையில்லை. எவையெல்லாம் தங்களை எதிர்க்கும் கட்சிகளோ அதனை அடக்குவதற்கு அமலாக்கத்துறையை பயன்படுத்துகிறார்கள். அடிபணிந்தால் அவர்கள் மீதான அமலாக்கத்துறை வழக்கே மரணித்து விடும். இதற்கு இந்தியா முழுக்க - பல்வேறு மாநிலங்களில் பல உதாரணங்கள் உண்டு. இதில் சமீபத்திய அசிங்க உதாரணம்தான் அஜித்பவார் ஆவார். இப்படியெல்லாம் அம்பலம் ஆவது குறித்த வெட்கம் துளிகூட பா.ஜ.க.வுக்கு இருக்காது.**

அமலாக்கத்துறை - வருமான வரித்துறை - சி.பி.ஐ. ஆகியவை உருவாக்கப்பட்ட காலத்தில் குற்றத்தடுப்பு இதனுடைய நோக்கமாக இருந்திருக்கும். ஆனால் பா.ஜ.க. ஆட்சியில் தன்னாட்சிப் பாதுகாப்புக்காக இவை பயன்படுத்தப்படுகின்றன. அதுவும் பகிரங்கமாக. அதற்கேற்ற ஆட்களை பதவிகளில் வைத்துக் கொண்டு இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள்.

அமலாக்கத்துறையின் இயக்குநராக 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் சஞ்சய் குமார் மிஸ்ரா நியமிக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகள் பணி நியமன ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனை திடீரென்று மூன்று ஆண்டுகள் என ஆக்கினார்கள். 2021 நவம்பர் 18 ஆம் தேதியுடன் முடிய வேண்டும். இந்தப் நிலையில் 2022 நவம்பர் 18 வரை நீட்டித்து மீண்டும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அன்றும் அவர் ஓய்வு பெறவில்லை. இந்த பதவியில் இவரே ஐந்து ஆண்டுகள் இருக்க வாய்ப்பு ஏற்படுத்தும் காரியங்களையும் செய்தார்கள். சி.பி.ஐ. இயக்குநர் பதவிக்காலத்தை ஐந்து ஆண்டுகள் நீட்டித்ததைப் போல அமலாக்கத்துறை இயக்குநருக்கு பதவி நீட்டிப்பு வழங்கினார்கள். 2023 ஆம் ஆண்டு நவம்பர் 18 வரையில் அவர் பதவியில் நீடிப்பார் என்று உத்தரவிட்டார்கள்.

பொதுவாக இத்தகைய பதவியில் இருப்பவர்களை தேர்வு செய்யும் முறையும் வெளிப்படையானதாக இருக்கும். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் கூடித்தான் சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத்துறை இயக்குநரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்வு செய்வார்கள். அப்படிச் செய்யாமல் ஒன்றிய அரசு தான் விரும்பிய ஒருவருக்கே இப்படி பணி நீட்டிப்பு வழங்கிக் கொண்டிருப்பது நேர்மையற்ற செயல் என்பதால் அது பொதுவெளியில் கடுமையாகக் கண்டிக்கப்பட்டது.

மிஸ்ராவுக்கு வழங்கப்பட்ட பதவி நீட்டிப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரன்தீப் சிங் சுர்ஜேவாலா, மத்தியப் பிரதேச மகளிர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் டாக்டர் ஜெயா தாக்கூர், திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி.யான மஹூவா மொய்த்ரா ஆகியோர் இந்த மனுக்களை தனித்தனியாக தாக்கல் செய்தார்கள். அமலாக்கத்துறை இயக்குநரின் பதவிக்காலத்தை அவ்வப்போது நீட்டிக்க முடியாது என்ற நிர்வாக விதிமீறலைச் சுட்டிக் காட்டிய இவர்கள், இதில் உள்ள அரசியல் உள்நோக்கத்தையும் அம்பலப் படுத்தி இருந்தார்கள்.

"தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக அமலாக்கத்துறையைத் தவறாகப் பயன்படுத்தி, ஜனநாயகத்தின் அடிப்படைக் கட்டமைப்பையே ஒன்றிய அரசு அழித்துள்ளது. அமலாக்க முகமைகளின் நியமனமானது நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் இருக்க வேண்டும். நியமனமானது ஒருதலைப்பட்சமானதாக நடந்தால், அவர்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவார்கள்" என்று குற்றம் சாட்டப்பட்டது. இதுதான் இந்தியாவின் பல மாநிலங்களில் நடக்கிறது. அதனைத்தான் மனுவில் சொல்லி இருந்தார்கள்.

**இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் விக்ரம்நாத், சஞ்சய் கரோல் ஆகியோர் இதில் இடம்பெற்றிருந்தார்கள். சஞ்சய் மிஸ்ராவின் நியமனமானது சட்டவிரோதமானது என்பதை தெளிவாகச் சொல்லி விட்டார்கள் மூன்று நீதிபதிகள்.**

**"ஒரு குறிப்பிட்ட நபரின் பதவிக் காலத்தை மீண்டும் மீண்டும் நீட்டிப்பதன் காரணம் என்ன? அந்த நபரால் மட்டுமே அந்தப் பதவிக்குரிய கடமையைச் செய்ய முடியுமா? அமலாக்கத் துறையில் அவரது வேலையைச் செய்வதற்கு வேறு யாரும் இல்லையா? அவர் பதவிக்காலம் முடிந்துவிட்டால் அமலாக்கத்துறையே செயல்பட முடியாமல் போய்விடுமா?" என்று நீதிபதிகள் எழுப்பிய கேள்விகள் மிகமிக முக்கியமானது.**

**"நவம்பர் மாதம் வரை அந்தப் பதவியில் நீடிப்பார். அதற்கு மேல் நீடிக்க மாட்டார்" என்று ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா சொன்னதை உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏற்கவில்லை. 'ஜூலை மாதத்தோடு அவர் பதவியை விட்டு வெளியேற வேண்டும்" என்று நீதிபதிகள் உத்தரவிட்டார்கள். இது ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மிகப்பெரிய பின்னடைவு ஆகும். தங்களது உள்நோக்கத்துக்கு ஒருவரைப் பயன்படுத்தியது பா.ஜ.க. என்பது இதன் மூலம் மெய்ப்பிக்கப்பட்டு ஆகிவிட்டது.**

"அமலாக்கத்துறை என்பது எந்த ஒரு தனி நபருக்கும் அப்பாற்பட்ட நிறுவனம்" என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்லி இருக்கிறார். இதற்குப் பதில் அளித்த இந்தியாவின் மூத்த வழக்கறிஞர் கபில்சிபல், "பிறகு ஏன் சஞ்சய் மிஸ்ராவுக்கு மூன்று முறை பணி நீட்டிப்பு வழங்கினீர்கள். சில தனிநபர்கள் ஆட்சியில் இருக்கும் கட்சியின் அரசியல் நலன்களுக்காக சேவை செய்கிறார்கள் என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது" என்று குற்றம் சாட்டி இருக்கிறார்.

**ஜூலை மாத கடைசியுடன் சஞ்சய் மிஸ்ரா பதவி விலகிவிட்டால் மட்டும் இது மறக்கப்பட்டு விடக் கூடாது. "அமலாக்கத்துறை இயக்குநரின் பணி நீட்டிப்பு சட்டவிரோதம் என்றால் அவராலும் அவரது குழுவாலும் எடுக்கப்பட்ட எல்லா முடிவுகளும் ஆராயப்பட வேண்டும். அல்லது சட்ட விரோதம் என அறிவிக்கப்பட வேண்டும்" என்று மாநிலங்களவை உறுப்பினர் பிரியங்கா சதுர்வேதி சொல்லி இருக்கிறார். இதுவும் நியாயமான கருத்து தானே!..**

---

ஊட்டி தாவரவியல் பூங்காவில்

## 'கியூ ஆர் கோடு' அறிமுகம்!

*ஊட்டி, ஜுலை 15-*

*ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா அமைக்கும் பணிகள் 1848ம் ஆண்டு தொடங்கி 1867ம் ஆண்டு முடிக்கப்பட்டது.*

*ஊட்டி தாவரவியல் பூங்காவை ஆண்டுதோறும் 30 லட்சம் சுற்றுலா பயணிகள் பார்வையிடுகின்றனர்.*

*நீலகிரி மாவட்டம் ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா அமைக்கும் பணிகள் 1848ம் ஆண்டு தொடங்கி 1867ம் ஆண்டு முடிக்கப்பட்டது. தொடக்கத்தில் ஆங்கிலேயருக்கு தேவையான காய்கறிகளை சாகுபடி செய்யவே இந்த பூங்கா அமைக்கப்பட்டது.*

*ஆனால், மெக் ஐவர் என்ற ஆங்கிலேயர் இங்கிலாந்தில் உள்ள கியூ பூங்காவை போன்று ஊட்டி பூங்காவை அமைக்க விரும்பி, ஐரோப்பிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட மரக்கன்று, செடிகளை நடவு செய்தார். பின்னர் ஜப்பான், ஆஸ்திரேலியா, கேனரி ஐலேண்ட் போன்ற நாடுகளிலிருந்து பிரபலமான மரக்கன்றுகளை கொண்டுவந்து நடவு செய்தார்.*

---




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.07.2023) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 45 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 1559 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கொ. வீரராகவ ராவ், டாடா டெக்னாலஜிஸ் தலைவர் (மனிதவளம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்) பவன் பகேரியா, Global Head சுசில் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# இணக்கமான வாழ்வுக்கு முன்னுரிமை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் - முதல் பக்கத் தொடர்ச்சி...

மரபுகள், நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட சட்டங்களை மதித்து பாதுகாப்பது முக்கியம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மதக் குழுவுக்கும், அதன் சொந்த விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமையை வழங்கும் பிரிவு 25ன்கீழ் அரசியலமைப்பால் வழங்கப்பட்ட சுதந்திரத்தை பொது சிவில் சட்டம் மீறுவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், பிரிவு 29, பல்வேறு மதக் குழுக்கள் தங்கள் தனித்துவமான கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் உரிமையை வழங்குவதாகவும், பொது சிவில் சட்டம் போன்ற ஒரு சட்டத்தைத் திணிக்கும் எந்தவொரு முயற்சியும், மத விவகாரங்களில் அரசின் அத்துமீறலாக கருதப்படும் என்றும், இது எதிர்காலத்தில் தனிமனித சுதந்திரங்கள் மீதான ஆக்கிரமிப்புகளுக்கு கவலைக்குரிய ஒரு முன்னுதாரணத்தை உருவாக்கிடும் என்றும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### கூட்டாட்சி அமைப்பு !

இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பு மாநிலங்களுக்கு தன்னாட்சியை வழங்குகிறது மற்றும் அவற்றின் தனித்துவமான சமூக கலாச்சார அடையாளங்களை மதிக்கிறது என்று தெரிவித்துள்ள அவர், தனிநபர் சட்டங்களை மையப்படுத்துவதன் மூலமும், மாநிலங்கள் தங்கள் சொந்த விவகாரங்களை நிர்வகிப்பதற்கான உரிமைகளை அழிப்பதன் மூலமும், பொது சிவில் சட்டம் இந்தக் கோட்பாட்டை மீறுவதாகத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மாநிலங்களின் செயலூக்கமான பங்கேற்பு மற்றும் ஒப்புதல் இல்லாமல் தனிநபர் சட்டங்களில் எந்தவொரு சீர்திருத்தமும் நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை பலவீனப்படுத்தும் என்றும், தனிநபர் சட்டங்களில் உள்ள சீரான தன்மை ஒன்றுபட்ட தேசத்தை உருவாக்காது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சமூக ஒருங்கிணைப்பு!

பொது சிவில் சட்டம், பல்வேறு மத சமூகங்களிடையே ஆழமான பிளவுகளையும் சமூக அமைதியின்மையையும் உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்றும், பலவகையான மத, பண்பாட்டு, மொழி வேறுபாடுகள் உள்ள நமது நாட்டில், மத நல்லிணக்கம் என்பது மிகவும் முக்கிய மானது என்றும், முரண்பாடுகளை உருவாக்கி பகைமையை வளர்க்கக்கூடிய ஒரே வகையான சிவில் சட்டத்தை திணிப்பதைவிட, மக்களிடையே பரஸ்பர புரிதலையும், மரியாதையையும் மேம்படுத்துவது முக்கியம் என முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### வரலாற்றுப் பின்னணி!

இந்தியாவில் தனி நபர் சட்டங்கள் பல நூற்றாண்டுகளாக பரிணமித்துள்ளன என்றும், பல்வேறு சமூகங்களின் வரலாற்று, கலாச்சார மற்றும் மத சூழல்களில் ஆழமாக வேரூன்றியுள்ளன என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், பொது சிவில் சட்டத்திற்கான முன்மொழிவு இந்த வரலாற்று அம்சத்தை அங்கீகரிக்கத் தவறுவதுடன், பல்வேறு மதக் குழுக்களின் மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளுடன் ஒத்துப்போகாத ஒரு சட்டத்தைத் திணிக்க முயற்சிப்பதாக வும் குறிப்பிட்டுள்ளார்.

### சிறுபான்மையினர் உரிமைகள்!

அரசியலமைப்பின் 29வது பிரிவின் மூலம், சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்துப் பாதுகாக்கும் மதச்சார்பற்ற நாடு என்பதில் இந்தியா பெருமை கொள்வதாகவும், அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணை, மாநிலங்களின் பழங்குடிப் பகுதிகள், மாவட்ட மற்றும் வட்டாரக் கவுன்சில்கள் மூலம் தங்கள் பழக்கவழக்கங்களையும் நடைமுறைகளையும் பாதுகாப்பதை உறுதி செய்வதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பொது சிவில் சட்டம் இயல்பிலேயே, அத்தகைய பழங்குடி சமூகங்களை அதிக அளவில் பாதிக்கும் மற்றும் அவர்களின் பாரம்பரிய நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் அடையாளங்களைப் பின்பற்றுவதற்கும், பாதுகாப்பதற்கும், அவர்களின் உரிமையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஆற்றலை உள்ளடக்கியதாக பொது சிவில் சட்டம் அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

### சமூகப் பொருளாதார தாக்கங்கள்!

நமது சமூகத்தில் நிலவும் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கருத்தில் கொள்ளாமல், ஒரே மாதிரியான சட்டத்தை அமல்படுத்துவது, பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், வெவ்வேறு சமூகங்கள் வளர்ச்சி, கல்வி மற்றும் விழிப்புணர்வின் வெவ்வேறு நிலைகளைக் கொண்டுள்ளன என்றும், அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரேமாதிரியான அணுகுமுறை தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கக்கூடும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நமது மகத்தான தேசத்தின் கட்டமைப்பை உருவாக்கும் பல்வேறு சமூகங்களிடையே இணக்கமான வாழ்வை வளர்ப்பதே நமது முதன்மை குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், ஒரே மாதிரியான சட்டத்தைத் திணிப்பதற்குப் பதிலாக, மதங்களுக்கிடையிலான உரையாடல்களை வலுப்படுத்துவதிலும், சகிப்புத் தன்மையை ஊக்குவிப்பதிலும், இந்தியாவை வரையறுக்கும் வேற்றுமையில் ஒற்றுமை உணர்வை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துவோம் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தற்போதைய நிலையில், மாநில அரசுகள், மதத் தலைவர்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளுடன் இச்சட்டம் தொடர்பான விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இது அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை எட்டுவதற்கு முக்கியமானது என இந்திய சட்ட ஆணையத் தலைவரிடம் கோரியுள்ளார்.

மேற்காணும் கருத்துகளைத் தீவிரமாகப் பரிசீலித்து, பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று இந்திய சட்ட ஆணையத் தலைவர் நீதியரசர் ரிதுராஜ் அவஸ்தி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டங்களில், ஒரேமாதிரியான தன்மையை கொண்டுவர முயற்சிப்பதைவிட, அனைத்து மக்களுக்கும் உரிமைகள் மற்றும் வாய்ப்புகளில் ஒரேமாதிரியான சூழ்நிலையை ஏற்படுத்துவதை நமது நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளதோடு, பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் ஒரே மாதிரியான பொது சிவில் சட்டம் தன்மை வழிவகுக்காது என்ற அடிப்படைக் கோட்பாட்டை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், நமது நாட்டின் பலம், அதன் பன்முகத்தன்மையில் உள்ளதாகவும், பொது சிவில் சட்டத்தின் மூலம் அதை ஒருமுகப்படுத்த முயற்சிப்பதை விட, நாம் நமது பன்முகத்தன்மையை நிலைநிறுத்திக் கொண்டாட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### மேயர் - துணை மேயர் - நகர்மன்ற - பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட

## உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு மாதாந்திர மதிப்பூதியம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

*சென்னை, ஜுலை 15 -*

*உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள்*

*மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள், தாங்கள் முழுநேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ளதால், தங்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க வேண்டும் என 13.04.2022 அன்று முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.*

*முதலமைச்சர் அவர்கள், இக்கோரிக்கையினை பரிசீலித்து, மாநகராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர், துணை மேயர், நகர் மன்ற தலைவர், துணைத் தலைவர், பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களின் மக்கள் நலப் பணிகளை சிறப்பிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள்.*

*இதன்படி, மாநகராட்சி மேயர்களுக்கு, மாதந்தோறும், ரூபாய் முப்பதாயிரம், துணை மேயர்களுக்கு ரூபாய் பதினைந்தாயிரம் மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ரூபாய் பத்தாயிரம் மதிப்பூதியம் வழங்கப்படும். இதே போன்று, நகராட்சி மன்றத் தலைவர்களுக்கு ரூபாய் பதினைந்தாயிரம், துணைத் தலைவர்களுக்கு ரூபாய் பத்தாயிரம் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்களுக்கு ரூபாய் ஐந்தாயிரம் மதிப்பூதியம் வழங்கப்படும்.*

*மேலும், பேரூராட்சித் தலைவர்களுக்கு ரூபாய் பத்தாயிரம், பேரூராட்சி துணைத் தலைவர்களுக்கு ரூபாய் ஐந்தாயிரம் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மதிப்பூதியம் வழங்கப்படும். இந்த மதிப்பூதியம், இம்மாதம், அதாவது, 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் வழங்கப்படும்.*

*இந்நடவடிக்கை, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத் திறனை வலுப்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுவரும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒரு முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளது.*



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (13.7.2023) தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி வாயிலாக, மகளிர்க்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.